KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2, No. n07 (2018)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v2in07.1

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் ‘கலைஞர் உலா’

Pavalareru S. Balasundaranar's Kalaignar Ula

Dr. U. Alibava[1,*]

[1] Professor & Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli - 620 024
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 11 July 2018
Revised: 12 July 2018
Accepted: 20 July 2018
Published: 01 August 2018

Article ID
KIJTS-2018-0049

Peer review
Double-blind peer review

Keywords
Pavalareru S. Balasundaranar
Kalaignar Ula
Ula Literature
M. Karunanidhi
Political Personality
Love for Tamil
Social Justice
Public Welfare
Tamil Literature.

ABSTRACT

In Tamil literature, Ula is a minor literary genre that portrays the greatness, personality and distinguished qualities of a hero or a prominent figure to the public. Within this literary tradition, Pavalareru S. Balasundaranar’s ‘Kalaignar Ula’ is a work that brings together political, artistic, linguistic, cultural and social ideas. This article introduces the poet’s life and contributions and examines the subject matter, content and literary structure of ‘Kalaignar Ula’. In particular, it explains how the work portrays the political personality and leadership qualities of Kalaignar M. Karunanidhi, his concern for public welfare, love for the Tamil language, linguistic consciousness, commitment to social justice, and views on educational development and women’s advancement. The Ula songs also bring out Karunanidhi’s association with various art forms, including prose, drama, cinema and poetry, as well as his social contributions in public life. By combining historical details with literary elements, Pavalareru S. Balasundaranar presents Kalaignar as a forerunner of Tamil linguistic and social progress. Through an examination of ‘Kalaignar Ula’, this study highlights not only the multifaceted personality of Kalaignar but also the ability of the Ula genre to document contemporary political and social thought.

How to cite this article: Dr. U. Alibava (2018). பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் ‘கலைஞர் உலா’. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *2*(n07), 1. https://doi.org/10.63300/kalanjiyam.v2in07.1
Copyright and licence: © 2018 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர்

தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சிராப்பள்ளி - 620 024

Email : alibavapkm@gmail.com

சுருக்கம்

தமிழ் இலக்கியத்தில் உலா என்பது ஒரு தலைவனின் அல்லது சிறப்புமிக்க ஒரு பெருமகனாரின் பெருமை, ஆளுமை, தனித்தன்மை வாய்ந்த பண்புகளை மக்கள் முன் எடுத்துரைக்கும் சிற்றிலக்கிய வகையாகும். இந்த இலக்கிய மரபில், பாவலரேறு சி. பாலசுந்தரனாரின் 'கலைஞர் உலா' அரசியல், கலை, மொழி, பண்பாடு, சமூகம் சார்ந்த கருத்துகளை ஒருங்கே இணைத்து வைக்கும் படைப்பாகத் திகழ்கிறது. இக்கட்டுரை பாவலரின் வாழ்க்கையையும் பங்களிப்புகளையும் அறிமுகப்படுத்தி, 'கலைஞர் உலா'வின் பொருள், உள்ளடக்கம், இலக்கிய அமைப்பு ஆகியவற்றை ஆராய்கிறது.

குறிப்பாக, கலைஞர் மு. கருணாநிதியின் அரசியல் ஆளுமை, தலைமைப் பண்புகள், மக்கள் நலன் மீதான அக்கறை, தமிழ்மொழிப் பற்று, மொழி உணர்வு, சமூக நீதிக்கான உறுதி, கல்வி வளர்ச்சி மற்றும் பெண்கள் முன்னேற்றம் பற்றிய கருத்துகள் ஆகியவற்றை இப்படைப்பு எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை இது விளக்குகிறது. உரைநடை, நாடகம், திரைப்படம், கவிதை உள்ளிட்ட பல்வேறு கலை வடிவங்களுடன் கருணாநிதி கொண்டிருந்த தொடர்பையும், பொது வாழ்வில் அவர் ஆற்றிய சமூகப் பங்களிப்புகளையும் உலாப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

வரலாற்றுச் செய்திகளை இலக்கியக் கூறுகளுடன் இணைத்து, பாவலரேறு சி. பாலசுந்தரனார் கலைஞரை தமிழ் மொழி வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் முன்னோடியாக முன்வைக்கிறார். 'கலைஞர் உலா'வை ஆய்வு செய்வதன் வழியாக, கலைஞரின் பன்முக ஆளுமையை மட்டுமன்றி, சமகால அரசியல் மற்றும் சமூகச் சிந்தனையைப் பதிவு செய்யும் உலா இலக்கிய வகையின் ஆற்றலையும் இவ்வாய்வு சிறப்பித்துக் காட்டுகிறது.

திறவுச்சொற்கள்

பாவலரேறு சி. பாலசுந்தரனார், கலைஞர் உலா, உலா இலக்கியம், மு. கருணாநிதி, அரசியல் ஆளுமை, தமிழ்ப் பற்று, சமூக நீதி, மக்கள் நலன், தமிழ் இலக்கியம்.

தமிழ் இலக்கிய மரபில் உலா இலக்கியம் என்பது ஒரு தலைவனின் சிறப்புகளையும், அவனது ஆளுமையையும், புகழையும் எடுத்துரைக்கும் தனித்துவமான இலக்கிய வகையாகும். இம்மரபின் தொடர்ச்சியில் அமைந்துள்ள கலைஞர் உலா என்னும் நூல், கலைஞர் மு. கருணாநிதியின் அரசியல் ஆளுமை, தமிழ்ப்பற்று, சமூகச் சிந்தனை, கலைத்திறன், தலைமைப் பண்பு ஆகியவற்றை இலக்கிய நயத்துடன் எடுத்துரைக்கிறது. குறிப்பாக, மரபிலக்கிய உத்திகளையும் சமகால அரசியல் வரலாற்றையும் இணைத்துக் காட்டும் தன்மை இந்நூலில் காணப்படுகிறது. பாவலரேறு ச. பாலசுந்தரனார் தமிழின் மரபிலக்கணத்திலும் படைப்பிலக் கியத்திலும் ஆழ்ந்த புலமை பெற்றவர்.

தமிழ் இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியல், பண்பாடு, அரசியல், சமூக மாற்றம், மொழியுணர்வு ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட பெரும் அறிவுக் களஞ்சியமாகும். சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரை தமிழின் படைப்புலகம் பல்வேறு வடிவங்களிலும் சிந்தனைப் போக்குகளிலும் வளர்ந்து வந்துள்ளது. அவற்றுள் உலா இலக்கியம் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

உலா இலக்கியம் என்பது தலைவன் அல்லது இறைவன் வீதியுலா வருவதையும், அவனைக் கண்டு மகளிர் வியந்து போற்றுவதையும் அடிப்படையாகக் கொண்ட இலக்கிய வகையாகும். இதன் வழியாகத் தலைவனின் அழகு, வீரம், புகழ், ஆட்சித்திறன், கொடை, அறச்செயல் போன்ற பண்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன.

இம்மரபைச் சமகால அரசியல் ஆளுமையை மையமாகக் கொண்டு அணுகும் வகையில் கலைஞர் உலா அமைந்துள்ளது. இந்நூலில் கலைஞர் மு. கருணாநிதி ஒரு தலைமைப் பண்புமிக்க அரசியல் ஆளுமையாக மட்டுமன்றி, தமிழ்மொழி, கலை, இலக்கியம், சமூகநீதி ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பங்காற்றியவராகச் சித்திரிக்கப்படுகிறார்.

இதனுடன் பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் வாழ்க்கை மற்றும் தமிழ்ப்பணிகளை இணைத்துப் பார்ப்பதன் மூலம் மரபிலக்கிய அறிவும் நவீன இலக்கியப் படைப்பாக்கமும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புபடுகின்றன என்பதைப் பார்க்க முடிகிறது.

கலைஞர் மு. கருணாநிதி வாழ்க்கை வரலாறு

தமிழக அரசியல் வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் அழியாத இடத்தைப் பெற்றவர் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி. இவர் 1924ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் நாள் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளையில் பிறந்தார். தந்தை முத்துவேலர்; தாயார் அஞ்சுகம் அம்மையார். சிறுவயதிலிருந்தே தமிழ் மொழி, நாடகம், இசை, அரசியல் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டிருந்தார்.

இளமைக் காலத்திலேயே சமூக விழிப்புணர்வும் மொழியுணர்வும் அவரிடம் வளர்ந்தன. மாணவப் பருவத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். பின்னர் திராவிட இயக்கத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, சமூகநீதி, சாதி ஒழிப்பு, பகுத்தறிவு, மொழியுரிமை ஆகியவற்றைத் தமது பொதுவாழ்வின் அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டார். 1942ஆம் ஆண்டு முரசொலி இதழைத் தொடங்கி, அதன் வழியாகத் தமது அரசியல் மற்றும் சமூகச் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு சென்றார். எழுத்து, பேச்சு, நாடகம், திரைப்படம் ஆகிய பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்திச் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

திரைப்படத் துறையில் கதை, வசனம் எழுதுவதன் மூலம் மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றார். குறிப்பாக, பராசக்தி திரைப்படத்தின் வசனங்கள் சமூகச் சீர்திருத்தம், பகுத்தறிவு, மூடநம்பிக்கை எதிர்ப்பு போன்ற கருத்துகளை வெளிப்படுத்தின.

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் 1969ஆம் ஆண்டு தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். ஐந்து முறை முதலமைச்சராகப் பணியாற்றினார். கல்வி, சமூகநீதி, மொழி வளர்ச்சி, இடஒதுக்கீடு, உள்கட்டமைப்பு, பெண்கள் முன்னேற்றம் போன்ற பல்வேறு துறைகளில் அவரது ஆட்சிக்காலம் குறிப்பிடத்தக்கது.

அவர் அரசியல்வாதியாக மட்டுமல்லாமல், கவிஞர், நாடகாசிரியர், உரையாசிரியர், திரைக்கதை ஆசிரியர், இதழாசிரியர் எனப் பன்முகத் திறன்களைக் கொண்டிருந்தார். திருக்குறளுக்கு உரை எழுதியதுடன், சங்க இலக்கியம் மற்றும் காப்பிய மரபுகள் குறித்தும் தொடர்ந்து எழுதியுள்ளார்.

2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7ஆம் நாள் சென்னையில் மறைந்தார். இருப்பினும், அவரது அரசியல் பணிகளும் இலக்கியப் படைப்புகளும் தமிழ் வரலாற்றில் தொடர்ந்து ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

பாவலரேறு ச. பாலசுந்தரனார் வாழ்வும் பணியும்

தமிழ் இலக்கண ஆய்வுலகில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவர் பாவலரேறு ச. பாலசுந்தரனார். 1924ஆம் ஆண்டு பிறந்த இவர் 2007ஆம் ஆண்டு மறைந்தார். தஞ்சைத் தமிழ்ச் சூழலோடு நெருங்கிய தொடர்புடைய இவர், தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். கரந்தைப் புலவர் கல்லூரியில் கல்வி பயின்று, அங்கேயே ஏறத்தாழ 32 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றினார். மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணத்தையும் இலக்கியத்தையும் கற்பிப்பதோடு, மரபிலக்கணக் கருத்துகளை ஆராய்ந்து விளக்கும் பணியிலும் ஈடுபட்டார். அவருடைய முதன்மையான ஆய்வுப் பணி தொல்காப்பியத்தை மையமாகக் கொண்டது. தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் ஆகிய பிரிவுகளின் இலக்கணக் கூறுகளை ஆராய்ந்து விளக்கினார். இவருடைய தொல்காப்பியம் - ஆராய்ச்சிக் காண்டிகையுரை ஐந்து பகுதிகளைக் கொண்டது. அந்நூல் சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மரபுப் பாக்கள், நாடகங்கள், கவியரங்கப் படைப்புகள், இலக்கிய ஆய்வுகள், இலக்கண நூல்கள், உரைநூல்கள், அகராதிப் பணிகள் எனப் பல்வேறு தளங்களில் இயங்கிய அவர் 1950ஆம் ஆண்டு முதல் மறையும் காலம் வரை ஏறத்தாழ ஐம்பது நூல்களை எழுதியுள்ளார். 2005ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழிலக்கணம் உரைநடை நூல் - சொற்படலம் அவரது இலக்கணப் பணிகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வாறு மொழியின் மரபையும் இலக்கியத்தின் செழுமையையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்ட பாலசுந்தரனாரின் பன்முக ஆளுமையைப் புரிந்துகொள்வது, தமிழின் மரபிலக்கிய வளர்ச்சியை ஆராய்வதற்கு அடிப்படையாக அமைகிறது.

கலைஞர் உலா

தமிழ் இலக்கியத்தில் உலா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். இறைவன் அல்லது தலைவன் வீதியுலா வரும்போது அவனது சிறப்புகளைக் கண்டு மகளிர் வியந்து போற்றுவதாக இவ்வகை இலக்கியம் அமைகிறது. சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய திருக்கயிலாய ஞான உலா, உலா இலக்கிய மரபில் குறிப்பிடத்தக்கது. பின்னர் பல்வேறு காலங்களில் அரசர்கள், இறைவர்கள், தலைவர்கள் ஆகியோரை மையமாகக் கொண்டு உலா இலக்கியங்கள் தோன்றின. இம்மரபின் அடிப்படையில் கலைஞர் மு. கருணாநிதியை மையப்படுத்திக் கலைஞர் உலா அமைந்துள்ளது. இந்நூல் கலைஞரின் அரசியல், கலை, மொழி, சமூகப் பண்புகளைப் பல்வேறு உருவகங்களின் வழியாக வெளிப்படுத்துகிறது. நூலின் தொடக்கத்திலேயே கலைஞரின் அரசியல் மரபு எடுத்துரைக்கப்படுகிறது. தந்தை பெரியாரின் சமூகச் சிந்தனையும் பேரறிஞர் அண்ணாவின் அரசியல் வழிகாட்டுதலும் கலைஞரின் ஆளுமை உருவாக்கத்தில் முக்கிய இடம் பெறுவதாக,

செந்தமிழர் வாழ்வு சிறந்தோங்கச் சிந்தித்து

முந்தடிமை வீழ்த்தி முறைவளர்க்கும் - தந்தை

பெரியார் திருமரபில் பேச்சுத் திறத்தால்

தெரியார்க்கும் தென்னகத்தின் சீர்த்தி - தெரிவித்து

நண்ணாரும் நண்புகொள நாவன்மை யால்அரசப்

பெண்ணாளைக் கைப்பிடித்த பேரறிஞன் - அண்ணாவின்

பிற்றோன்றிச் செந்தமிழர் பீடுகொளுந் தொண்டினுக்கு

முற்றோன்றி, அண்ணன் முகக்குறிப்பைக் - கற்றோர்ந்து

முக்கரணத் தாலுந்தன் மூச்சாத் தி மு க வைத்

தக்க படிவளர்க்கும் தாதையாய் - மக்களுளம்

தேனூறித் தி.மு.க. - தி.மு.க. என்றிசைக்க

ஏனோரும் போற்றபணி ஏய்ந்துதமிழ்க் - கோனாகித்

தண்ணார் தமிழகத்தைத் தாங்குந் தலைமையிலே

அண்ணாவைப் பின்பற்றி ஆண்டுவரும் - கண்ணான

கன்னித் தமிழ்க்கலைஞன்

எனும் அடிகளில் இந்நூல் பதிவு செய்கின்றது.

கலைஞரின் அரசியல் ஆளுமையும் தலைமைப் பண்பும்

கலைஞர் உலா நூலில் அரசியல் தலைமை என்பது அதிகாரத்தைப் பெறுவதற்கான செயலாக மட்டும் காட்டப்படவில்லை. மக்களின் நலனுக்காகச் செயல்படும் பொறுப்புணர்வாக எடுத்துரைக்கப்படுகிறது. கலைஞர் திராவிட இயக்கத்தின்

கொள்கைகளைத் தொடர்ந்து வளர்த்த தலைவராகச் சித்திரிக்கப்படுகிறார். குறிப்பாக, தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனையும் பேரறிஞர் அண்ணாவின் அரசியல் மரபும் அவரது ஆளுமையின் அடித்தளங்களாகக் காட்டப்படுகின்றன.

"அண்ணாவைப் பின்பற்றி ஆண்டுவரும் கண்ணான

கன்னித் தமிழ்க்கலைஞன்"

என்ற தொடர், அண்ணாவின் அரசியல் வழித்தடத்தில் பயணித்த கலைஞரின் தலைமைப் பண்பை எடுத்துரைக்கிறது.

அரசியல் தலைமை, அமைச்சுப் பொறுப்பு, நிர்வாகத் திறன், திட்டமிடல், மக்களுடன் கொண்ட உறவு ஆகியவை நூலில் உருவகங்களின் வழியாகச் சித்திரிக்கப்படுகின்றன. கலைஞரின் தலைமை என்பது தனிப்பட்ட புகழை மையமாகக் கொண்டதல்ல; தமிழகம், தமிழ்மொழி, மக்கள் நலம் ஆகியவற்றை முன்னிறுத்தும் பொதுவாழ்வுப் பணியாகப் படைக்கப்படுகிறது.

தமிழ்ப்பற்றும் மொழியுணர்வும்

கலைஞரின் வாழ்க்கையில் தமிழ்மொழி முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது. தமிழ் இலக்கியம், வரலாறு, இலக்கணம், காப்பியம் ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு அவரது படைப்புகளில் வெளிப்படுகிறது.

"முத்தமிழாம் சீர்த்த முடியணிந்(து) இங்கெல்லோர்க்கும்

ஒத்தமுறை நல்கும் ஒளிர்வடமும்"

என்ற வரிகள் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க் கூறுகளுடன் கலைஞரின் ஆளுமையை இணைத்துக் காட்டுகின்றன.

பாலசுந்தரனார் கலைஞரின் திறன்களை அரச அணிகளாக உருவகிக்கின்றார். "அனைத்து மக்களுக்கும் சமத்துவ ஒளிநல்கும் பொன்னாரத்தை அணிந்தவர். உள்ளம் கலங்காமை என்னும் வாகுவளையம் அணிந்தவர். நாடு காவலைப் புத்தாடையாக அணிந்தவர். மக்கள் நலம் காக்கும் பணியை மாலையாக அணிந்தவர். பல்கலை வளங்கள் ஆயுதங்களாகச் சூழ்ந்திருக்க, திருவிடத்தை (திராவிடத்தை) நட்பு நாடாக் கொண்டு கடமையெனும் யானை ஏறி, கண்ணியம் என்னும் போர்க் களிற்றில் கட்டுப்பாடு என்னும் பிடரமர்ந்தவர்" என்று பாடுகின்றார். இதனை,

.... - சித்தம்

கலங்காத வாகு வளையமொடு காவற்

புலங்காக்கும் புத்தாடை பூண்டு - நலங்காக்கும்

பண்பலங்கல் சூடிப், பயிலும் கலைவளமாம்

திண்படைகள் சூழத் திருவிடத்தின் - நண்பால்

கடமைப் பிடியேறிக் கண்ணியமாம் திண்மைக்

கடகளிற்றில், கட்டுப்பா டென்னும் - பிடரமர்ந்து

எனும் அடிகளில் பாவலர் பாடுகின்றார்.

கலைஞரின் படைப்புலகில் இலக்கியம், நாடகம், திரைப்படம், உரைநடை ஆகியவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. தமிழின் பழமையான இலக்கியச் செல்வங்களை நவீன மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் அவர் மேற்கொண்ட முயற்சிகளும் அவரது தமிழ்ப்பற்றின் அடையாளங்களாகும்.

உலா இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவன் பவனி

உலா இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவர் பவனி வருவது மரபு. இம்மரபுப்படி பாவலரேறு ச. பாலசுந்தரனார் கலைஞர் உலாவைப் பாடியுள்ளார். கலைஞர் உலாவில் உடன் வரும் பரிவாரங்கள் உருவகிக்கப்படுகின்றன. பகுத்தறிவு என்னும் மன்னர்கள், புகழை ஈட்டித் தரும் கழகத் தொண்டர்களாகிய படையினர், பண்பாடு என்னும் பல அமைச்சர்கள், பத்திரிக்கைகளாகிய கருத்துச் சேனைகள், பைந்தமிழ் என்னும் முத்துக்குடை, எட்டுத்திக்கும் புகழை அறிவிக்கும் வீர முரசொலி, பல்லாண்டு பாடும் கொடிகளின் அணிவகுப்புகளுடன் கலைஞர் உலா வருவதாகப் பாவலர் பாடுகிறார்.

மாசில் பகுத்தறிவாம் மன்னவர்கள் முன்புசெலத்

தேசுதரும் சீர்திருத்தத் தொண்டரென்னும் - பாசமிகு

வெல்படைகள் பின்தொடர, வீறுமிகு பண்பாடாம்

பல்லமைச்சர் பக்கமெல்லாம் சூழ்ந்துவரச் - சொல் வழங்கும்

பத்திரிக்கைச் சேனைப்பா ராட்டிசைக்கப், பைந்தமிழாம்

முத்துக்குடைநிழற்ற, மொய்த்தபுகழ் - எத்திசையும்

கொற்ற முரசொலித்துக் கூறக், கொடிப்படைகள்

சுற்றிப்பல் லாண்டிசைக்கச், சூழ்சங்கம் - வெற்றி

எனப் பாடும் பாவலர் இதில் நட்பரசர், படையணியினர், பல்லமைச்சர், முத்துக்குடை, கொற்றமுரசு, அமைச்சர்கள், கொடி முதலியன அணிவகுக்க கலைஞர் பவனி வந்தார் என்கிறார். இதில் வரும் முரசொலி உலா அணி வகுப்பில் இடம்பெறுவது மரபாக இருந்தபோதும் கலைஞர் நடத்தும் ஏடும் அவர் நடத்தும் கழகத்தின் ஏடும் முரசொலி என்பதும் இங்கு பாவலரால் குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

ஏழு பருவ மகளிர்

வெற்றி முழக்கங்களுடன் உலாவரும் எல்லோரையும் பார்த்த பெண்கள் பலரும் மகிழ்ச்சியில் திளைத்து மயங்கி நின்றனர். இங்ஙனம் நின்ற பெண்களுள் எழு பருவத்துப் பெண்களும் இருந்தனர்; உலா இலக்கியத்தின் முக்கியமான அமைப்புக் கூறுகளில் ஒன்று ஏழு பருவ மகளிரின் வருணனையாகும். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய பருவ நிலைகள் வழியாகத் தலைவனின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது. கலைஞர் உலா நூலிலும்

இம்மரபு பின்பற்றப்படுகிறது. பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனும் மகளிரின் அழகு, மனநிலை, பண்பு, கலைத்திறன் போன்றவை வருணிக்கப்படுகின்றன. இவ்வருணனைகள் வெறும் உடலழகை மட்டும் மையப்படுத்தாமல், தமிழ், கவிதை, இசை, நடிப்பு, அமைச்சு, தலைமை போன்ற கருத்துகளுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன.

மடந்தைப் பருவ வருணனையில் நடனக் கலையும் இசையும் இடம்பெறுகின்றன. அரிவைப் பருவத்தில் கலைஞரின் கலைத்திறனும் இலக்கியப் புலமையும் சிறப்பிக்கப்படுகின்றன. தெரிவைப் பருவம் அமைச்சுப் பொறுப்பையும் நிர்வாகத் திறனையும் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது. பேரிளம்பெண் பருவம் தலைமைப் பண்பை வெளிப்படுத்துகிறது.

இதன் வழியாக உலா இலக்கியத்தின் மரபுவழி அமைப்பு சமகால அரசியல் ஆளுமையைப் போற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

கலை, இலக்கியம், நாடகம் - கலைஞரின் பன்முக ஆளுமை

கலைஞர் மு. கருணாநிதியின் தனித்துவமான பண்புகளில் ஒன்று அவரது பன்முகப் படைப்பாற்றலாகும். அவர் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல் கவிஞர், நாடகாசிரியர், திரைக்கதை ஆசிரியர், வசனகர்த்தா, உரையாசிரியர் எனப் பல துறைகளில் இயங்கினார். இந்நூலில் கலைஞரின் பன்முகத் திறன்கள் மகளிரின் பல்வேறு கலை வடிவங்களுடன் இணைத்துச் சித்திரிக்கப்படுகின்றன.

கலைஞரின் இளமைக் காலக் கொள்கைப் பிடிப்பு, தன்னை முனிலைப்படுத்தும் திட்டம் இல்லாமை, கைம்மாறு கருதாத செயல் வேகம் ஆகிய தொண்டுகள் பேதைப் பருவப் பெண்ணாக நின்று கலைஞரைக் காணக் காத்து நின்றாள் என்கிறார். இதனைப் பாவலர்,

சாற்றும் பதவித் தனம்வளராள் - ஏற்றமெனும்

கூந்தல் வளர்க்கும் குறிப்பறியாள் கொள்கையெனும்

காந்தத் திருவிழியாள் கைம்மாறொன் - றேந்தாத

தொண்டென்னும் பேதைப் பருவத்தாள் சூழ்காதல்
கொண்டுவரக் கூர்ந்த அருட்செல்வன் - கண்டருளிப்
புன்முறுவல் பூக்கப் பொலிவுற்றாள்;

எனக் காட்டுகின்றார். தொண்டைப் பேதைப் பருவமாகப் பாடிய பாவலர் கலைஞரின் பேச்சைப் பெதும்பைப் பருவமாகப் பாடுகிறார். கலைஞரைக் கண்ட பேச்செனும் பெதும்பைப் பருவப் பெண்,

பேச்சாம் பெதும்பைப் பருவத்தாள் பெண்மையவாம்
மூச்சால் திருமுகமன் முன்மொழியப் - பூச்சாபம்
போக்கக் கடைக்கணருள் பூத்தான்பொலிந்தாள், தன்
ஆக்கம் பெருக அகமகிழ்ந்தாள் என்கிறார்.

மங்கைப் பருவத்தை எழுத்தென்னும் மங்கைப் பருவத்தாள் எனக் கூறுகிறார் பாவலர். அணங்கு போன்றவளாக பக்கத்தில் நிற்கும் பெண்ணொருத்தி இவ் உலகத்தைத் தன் அழகால் மயக்கி வயப்படுத்தும் நிலவு போன்ற முகத்தை உடையவள். வேலினைப் போன்ற கூர்மையான விழிகளை உடையவள்; நெற்றியில் கொள்கையைத் திலகமாக அணிந்தவள்; சிறப்புப் பொருந்திய செந்தமிழ் சேர்ந்த இதழ்களை உடையவள்; பகைவர்களுக்கு அஞ்சாத, கார் முகிலை ஒத்த நீண்ட கூந்தலை உடையவள்; மையணிந்து எல்லோரையும் மயக்கும் பார்வையை உடையவள்; மானைப் போன்ற மருண்ட விழிகளை உடையவள். பொய்யாப் புரட்சி முரசொலிக்கும் பூவைப் போன்ற மென்மையான தனத்தை உடையவள்;

எடையால் அணிவோர் கால்களை வருத்தும், வேலைப்பாடுகளால் பார்ப்போரை மருளச் செய்யும் பெருஞ்சிலம்பினை அணிந்த கால்களை உடையவள். கற்றுத் தெளிவு பெறுதலை இலக்காகக் கொண்ட மாணவர்கள் மயங்குமாறு ஈர்த்து ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் முத்தாரத்தைப் பூணாகக் கொண்ட புதுமையானவள்.

காணாதவர்களும் அவள் பேசும் கட்டுரை மொழிகளுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கும் கட்டான இடையினை உடையவள். சீர்திருத்தக் கருத்துகள் என்னும் தேனொழுகும் செவ்விதழினை உடையவள். மாபெரும் இதழ்களையுடைய தாமரையில் வீற்றிருக்கும் மங்கைப் பருவத்தாளான கலைமகள் தன் அழகிய முகத்திலுள்ள கண்களில் ஆர்வம் பொங்கும்படி தன் சிவந்த கரங்களைக் குவித்து வணங்கினாள். கலைஞரின் திருப்பார்வையால் அவள் ஆர்வத்தில் பங்கு கொள்ள, உள்ளம் தழைத்து உணர்வால் ஒன்றானாள். இதனைப் பாவலர்,

.... - காணாரும்

கட்டுரையால் கட்டுண்ணும கட்டிடையாள் சீர்திருத்த

மட்டுவளர் செவ்விதழாள் மாமடல்வாழ் - நெட்டெழுத்தாம்

மங்கையவள் மன்னும் திரு மு க க்கண் வேட்டெழுந்து

செங்கை குவித்தாள், திருநோக்கால் - பங்குகொள

உள்ளந்தழைத் துணர்வால் ஒன்றானாள்

என்று நயமாகப் பாடுகிறார். இப்பகுதியில் பல இலக்கிய நயங்களும் பாவலரால் கையாளப்பட்டுள்ளன.

நடிப்பை மடந்தைப் பருவப் பெண்ணாகப் பாவலர் உருவகிக்கிறார். அணிகலன்கள் பலவும் அணிந்து உறுப்புத்தோறும் எழில் அமைந்த மேனியாய் ஆடியும் பாடியும் வரும் நடிப்பென்னும் மடந்தை கலைஞர் எனும் தலைவனைக் கண்டு தலை நிமிர்ந்தாள் என்கிறார் பாவலர். அரிவைப் பருவத்தைக் கவிதையாகக் காட்டுகிறார். தென்னவர் முன் தமிழைத் தேர்ந்து வளர்த்த சங்கத்தில் முந்தித் தோன்றிய இலக்கியங்கள் முதல் பாரதி, பாரதிதாசன் படைப்புகள் வரை அணிகலன்களாக அணிந்து, சீர், தளை, தொடை முதலிய யாப்பு உறுப்புகளைக் கருதாமல் புதுமைக்

கவிதையாம் அரிவை கலைஞரைப் பார்த்து எழில் வீறுற்றாள் எனப் பாடுகிறார். இப்பகுதியில் தலை சிறந்த தமிழ் இலக்கியங்களையும், யாப்பு அணி ஆகியவற்றின் கூறுகளையும் உருவகங்களாக நயம்படப் பாவலர் எடுத்துரைக்கிறார்.

கலைஞரின் அமைச்சர் பதவியைப் பாவலர் தெரிவைப் பருவமாக் காட்டுகிறார். முரசொலி முழக்கத்துடன் அணிகலன்கள் பலவும் அணிந்து சீர்திருத்தக் கொள்கையெனும் திலகமிட்டு பேச்சு, வினைத் திட்பம், கொள்கை, நாட்டுப்பற்று, மொழிப் பற்று, ஒற்றுமை உணர்வு, ஆலாசனைத் திறம், ஊக்கம், உண்மை நிலை காணல் என்பனவற்றைக் கொண்ட அமைச்சுத் திறனாம் தெரிவைப் பருவத்தாள் கலைஞர் எனும் மன்னவனை உலாவில் கண்டு மகிழ்ந்தாள் எனறு பாவலர் வருணிக்கிறார்.

கலைஞரின் தலைமைப் பண்பைப் பாவலர் பேரிளம் பருவமாக சுட்டுகிறார். ‘கண்ணாடியின் முன்னே அமர்ந்து காணும் தலைமையெனும் பண்ணிசையை ஆளுகின்ற பேரிளம் பெண் பாவையவள்’ எனப் பாடும் பாவலர் ‘அணிகலன்கள் பலவும் அணிந்து உழைப்பு, செயல், சேவைகளால் செயல்படும் தலைமையெனும் பேரிளம் பெண் கலைஞரின் கடைக்கண் பார்வை பட்டவுடன் அகம் மகிழ்ந்தாள்’ எனவும் பாடுகிறார்.

தொண்டு, பேச்சு, எழுத்து, நடிப்பு, கவிதை, அமைச்சு, தலைமை ஆகிய ஏழு பருவப் பெண்டிர்களும் கலைஞர் மீது மாறாத கோட்பாட்டுக் காதல் மிகுந்தனர். அத்தகு பன்முகச் சிறப்புடைய கன்னித் தமிழ் வளர்க்கும் காதற் பெருஞ் செல்வனான கலைஞர் உலா உருவகங்கள்,

பயன் நோக்காத் தொண்டும் பயன்தரும் நற் பேச்சும்

நயமார் எழுத்தும் நடிப்பும் - மயலேறு

தீங்கவியும் தேர்ந்த அமைச்சும செயற்பண்பு

தாங்கும் தலைமையுமென் றேழ்பருவப் - பாங்குடைய

மாதர் மனங்கவர்ந்து மாறாத கோட்பாட்டுக்

காதல்மிக ஆங்கொருபால் கண்ணோடிச் - சாதனையால்

கன்னித் தமிழ்வளர்க்கும் காதற்பெருஞ் செல்வன்

மன்னும் பெரியோர்கள் வாழ்த்தெடுப்ப

எனும் இப்பகுதியில் நயமாகத் தொகத்துரைக்கப்பட்டுள்ளன.

மன்னர்கள் பலரும் கூட்டணியாக வந்து மகிழ்ந்து குலவி நற்பண்பகளைப் பாராட்டவும் நாட்டுப்பற்றுக் காரணமாக நட்புடன் பழகி, நட்பின் ஈட்டம் மிகுமாறு நாற்பத்தாறாவது வயதில் எழிலோங்க, குளிர்ச்சி நல்கும் தமிழ்த்தாய் தலைசிறந்து விளங்கும்படி வந்துதித்த அறிஞர் அண்ணாவின் பின்னால் அணிவகுத்த நல்லோன், தந்தை பெரியாரின் உள்ளத்தை ஏந்திப் பிடித்த முதல்வன், அதற்கு முன்னர் அன்பின்

வடிவமான திருக்குவளை முத்துவேல் செய்த தவத்தின் சிறப்பால், சூரியன் எனக் கூறத்தக்க அளவில், அஞ்சுகத்தம்மாள் ஈன்றெடுத்த கலைஞர் பெருமகன், பெருஞ்சிறப்புடைய செந்தமிழ்த் தாய் ஈன்றெடுத்த செல்வன், திசை எங்கணும் புகழ் பரப்பி வாழும் நற்கலைஞன், இல்லறத்தைப் பேரன்பால் தாங்கி நிற்கும் தயாளு அம்மையாருடனும் தண்டமிழ் சேர் மக்களுடனும் ஓங்கி, சீர்பலபெற்றுச் சிறந்தோங்கி வாழ்க! ஒளி பெற்று வாழ்க! பாங்குடைய பயன்களை நல்கும் தமிழ்நாட்டு அரசு வாழ்க! தமிழ் வாழ்க! எண்ணங்களை ஆக்கும் வண்ணக்கலைகள் அனைத்தும் பெற்று வாழ்வாங்கு வாழ்க! என்று பண் அமைத்துப் பல்லாண்டு பாடி வாழ்த்துக்கூறி, இருபக்கங்களிலும் நல்லோர்கள் வாழ்த்திசைத்தனர்.

வண்ணக் கலைபெருகி வாழ்க! எனப் - பண்ணமைத்துப்

பல்லாண்டு கூறியிரு பக்கத்தார் பாராட்ட

நல்லோர்கள் வாழ்த்திசைப்ப நாயகமாய் - வெல்லும்

களியானை மீது கருணா நிதியாய்

ஒளிபெருகப் போந்தான் உலா

எனக் கலைஞர் உலா வந்ததைப் பல்வேறு இலக்கிய இலக்கண நயங்களுடன் பாவலர் நூல் முழுதும் பதிவு செய்கிறார். பெரியார், அண்ணாவின் நெறிகளைப் பின்பற்றி ஆட்சி புரியும் கலைஞரின் வெற்றி விழாவைக் கண்டு மகிழ வேண்டுகிறார்.

‘பகுத்தறிவுப் பாசறையின் தந்தையாக விளங்கிய பெரியாரும் உள்ளத்தில் உறையும் பேரறிஞர் அண்ணாவும் வகுத்த நெறிகளைப் பின்பற்றி, தமிழ்நாட்டினைப் பண்பாட்டு நெறிகளால் ஆட்சி செய்கிற ஆகச்சிறந்த தலைவர் கலைஞரின் வெற்றி உலாவினை விழிகள் கண்டு மகிழுமாக’ எனும் பொருளில் அமைந்த,

பகுத்தறிவுப் பாசறையின் தந்தை பெரியார்

அகத்துறையும் பேரறிஞர் அண்ணா - வகுத்தநெறி

பற்றித் தமிழகத்தைப் பண்பாட்டால் ஆள் கலைஞர்

வெற்றிஉலாக் காண்க விழி!

எனும் அடிகளுடன் நூல் நிறைவடைகின்றது. இந்நூலில் கவிதை, நடனம், இசை, நாடகம், பேச்சு, எழுத்து ஆகியவற்றின் வழியாக கலைஞரின் ஆளுமை வெளிப்படுத்தப்படுகிறது. இங்கு கலை என்பது தனிப்பட்ட பொழுதுபோக்காக அமையாமல் சமூகச் சிந்தனையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் கருவியாக அமைகிறது. குறிப்பாகத் திரைப்பட வசனங்களின் வழியாக சமூகநீதி, பகுத்தறிவு, மொழியுணர்வு போன்ற கருத்துகளைப் பரப்பிய அவரது பங்களிப்பை இவ்விலக்கியப் பின்னணியுடன் தொடர்புபடுத்திப் பார்க்க முடிகிறது.

சமூகநீதியும் திராவிட இயக்கச் சிந்தனையும்

கலைஞரின் அரசியல் வரலாற்றில் சமூகநீதிக் கொள்கை முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. சாதி ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துதல், சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற நோக்கங்கள் திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கருத்துகளாக விளங்கின. கலைஞரும் இக்கருத்துகளைத் தனது அரசியல் செயல்பாடுகளின் வழியாக முன்னெடுத்தார். கலைஞர் உலா நூலில் இடம்பெறும் சீர்திருத்தம், நாட்டுமொழிப் பற்று, ஒற்றுமை, உழைப்பு, திட்டமிடல் போன்ற கருத்துகள் கலைஞரின் அரசியல் ஆளுமையை விளக்கும் அடையாளங்களாக அமைகின்றன. "கொற்றமிகு சீர்திருத்தக் கொள்கையெனும்" என்ற தொடர் சீர்திருத்தக் கொள்கையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. சமூக மாற்றத்தை இலக்கியப் பாடுபொருளாகக் கொள்வதன் மூலம் உலா இலக்கியம் சமகால அரசியல் வரலாற்றோடு இணைக்கப்படுகிறது.

பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் மரபிலக்கியப் புலமையும்

கலைஞர் உலாவின் இலக்கியப் பார்வையும்

பாவலரேறு ச. பாலசுந்தரனார் தொல்காப்பிய இலக்கண மரபில் ஆழ்ந்த புலமை பெற்றவர். அவருடைய ஆய்வுப் பணிகளில் மரபிலக்கணக் கருத்துகளைத் தெளிவுபடுத்துதல், சொற்களின் இயல்பை ஆராய்தல், இலக்கிய மரபுகளை விளக்குதல் ஆகியவை முதன்மை பெறுகின்றன.

அவரது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரை மரபிலக்கண ஆய்வில் முக்கியமான பங்களிப்பாக விளங்குகிறது. தொல்காப்பியத்தின் இலக்கணக் கூறுகளை ஆராய்ந்து விளக்கும் பணியில் அவரது புலமை வெளிப்படுகிறது. மேலும், மரபுப்பாக்கள், நாடகங்கள், கவியரங்கப் படைப்புகள் ஆகியவற்றில் அவர் ஈடுபட்டிருந்தமை அவரது இலக்கியப் படைப்பாற்றலை வெளிப்படுத்துகிறது. இத்தகைய மரபிலக்கியப் புலமையின் பின்னணியில் கலைஞர் உலா நூலை ஆராயும்போது, உலா இலக்கியத்தின் பாரம்பரியக் கூறுகள் நவீன அரசியல் ஆளுமையை எடுத்துரைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருப்பது தெளிவாகிறது.

மொழிநடை, உவமை, உருவக உத்திகள்

கலைஞர் உலா நூலின் மொழிநடையில் மரபுச் செய்யுள் அமைப்பும் செறிவான சொல்லாட்சியும் காணப்படுகின்றன. தமிழின் பழமையான இலக்கிய மரபில் பயன்படுத்தப்பட்ட அணியிலக்கண உத்திகள் இந்நூலிலும் இடம்பெறுகின்றன. மகளிரின் அழகு, அணிகலன்கள், ஆடை, கூந்தல், கண்கள், நடை போன்றவை வருணிக்கப்படும் இடங்களில் உவமை மற்றும் உருவகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதே நேரத்தில், அரசியல் கருத்துகளும் அழகியல் உருவகங்களின் வழியாக எடுத்துரைக்கப்படுகின்றன. சீர்திருத்தக் கொள்கை, அமைச்சுப் பொறுப்பு, தலைமை, தமிழ்ப்பற்று போன்ற கருத்துகள் அணிகலன்களாகவும் ஆடைகளாகவும் உருவகப்படுத்தப்படுகின்றன. இதனால்

அரசியல் கருத்தியல் நேரடியாகக் கூறப்படாமல் இலக்கிய அழகியலுடன் இணைக்கப்படுகிறது. இந்நூலின் மற்றொரு சிறப்பு, மரபிலக்கியச் சொல்லாட்சியைப் பயன்படுத்திச் சமகால அரசியல் ஆளுமையைப் போற்றுவதாகும்.

கலைஞர் உலாவின் வரலாற்று மற்றும் இலக்கிய முக்கியத்துவம்

ஒரு காலகட்டத்தின் அரசியல் வரலாற்றை இலக்கியம் வழியாக அறிந்துகொள்வது இலக்கிய ஆய்வின் முக்கியமான அணுகுமுறையாகும். அந்த வகையில் கலைஞர் உலா நூல் கலைஞர் மு. கருணாநிதியின் ஆளுமையைப் போற்றும் படைப்பாக அமைந்துள்ளது. அவரது அரசியல் மரபு, சமூகச் சீர்திருத்தச் சிந்தனை, தமிழ்ப்பற்று, கலைத்திறன், நிர்வாகப் பண்பு ஆகியவை இந்நூலில் இலக்கிய வடிவம் பெறுகின்றன. கலைஞரின் வரலாற்றைப் புரிந்துகொள்வதற்கு அவரது அரசியல் நிகழ்வுகள் மட்டுமன்றி, இலக்கியப் படைப்புகளும் முக்கியமான ஆதாரங்களாக அமைகின்றன. அவர் வாழ்ந்த காலத்தின் மொழியுணர்வு, அரசியல் சிந்தனை, சமூக மாற்றங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளவும் இத்தகைய படைப்புகள் துணைபுரிகின்றன. பாவலரேறு ச. பாலசுந்தரனாரின் வாழ்க்கை மற்றும் தமிழ்ப்பணிகளை இணைத்து அணுகும்போது, தமிழின் மரபு இலக்கண அறிவும் படைப்பிலக்கிய வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று துணையாக அமைவதை உணர முடிகிறது.

தமிழ் இலக்கிய மரபு காலத்திற்கேற்ப புதிய பாடுபொருள்களையும் புதிய இலக்கியப் பார்வைகளையும் ஏற்றுக்கொண்டு வளர்ந்து வருகிறது. அத்தகைய வளர்ச்சியின் ஒரு வெளிப்பாடாக கலைஞர் உலா நூலைக் கருதலாம். உலா இலக்கியத்தின் மரபுவழி அமைப்பை அடிப்படையாகக் கொண்டு கலைஞர் மு. கருணாநிதியின் அரசியல் ஆளுமை, தமிழ்ப்பற்று, கலைத்திறன், சமூகச் சிந்தனை, தலைமைப் பண்பு ஆகியவை இந்நூலில் எடுத்துரைக்கப்படுகின்றன. பாவலரேறு ச. பாலசுந்தரனார் தமிழின் மரபிலக்கணத்தையும் இலக்கியத்தையும் ஆராய்ந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்த்த அறிஞராக விளங்கினார். தொல்காப்பிய ஆய்வு, உரையாக்கம், படைப்பிலக்கியம், அகராதிப் பணி, ஆசிரியத் தொண்டு ஆகியவற்றின் வழியாகத் தமிழுக்குத் தொண்டாற்றினார். கலைஞர் மு. கருணாநிதி அரசியல், இலக்கியம், நாடகம், திரைப்படம் ஆகிய துறைகளில் தனது பங்களிப்பை வழங்கினார். இவ்விரு ஆளுமைகளையும் இணைத்து ஆராய்வதன் மூலம் தமிழ்மொழியின் மரபு, படைப்பாற்றல், சமூகச் சிந்தனை ஆகியவற்றின் தொடர்ச்சியைப் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே, கலைஞர் உலா நூல் உலா இலக்கிய மரபின் தொடர்ச்சியை வெளிப்படுத்துவதோடு, சமகால அரசியல் ஆளுமையைத் தமிழின் மரபுச் செய்யுள் அழகியலுடன் இணைக்கும் இலக்கிய ஆவணமாகவும் மதிப்பிடத்தக்கது. இந்நூலைத் தொடர்ந்து ஆராய்வது உலா இலக்கியத்தின் வளர்ச்சி, நவீன அரசியல் இலக்கியத்தின் தன்மை, தமிழின் பண்பாட்டு வரலாறு ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்குப் பெருமளவு உதவும்.

துணைநூல் :

References

[1.] பாலசுந்தரம். ச., கலைஞர் வாழ்க!, தாமரை வெளியீட்டகம், வடக்கு வீதி, தஞ்சாவூர், 1973.